StudentBounty.com

Register Number

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : 3 × 4 = 12

1. இசைத்தமிழ் என்பது யாது ? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை ?

2. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு. வி. க. உரைப்பன யாவை ?

3. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை ?

4. ஈகைப்பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

5. அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவழகனார் கருதுவதற்குக் காரணங்கள் யாவை ?

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : 3 × 4 = 12

6. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

7. செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது ?

8. முன்னேற்றம் என்பது பற்றி மு. வ. உரைப்பன யாவை ?

9. ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு. வ. காட்டும் வழிகள் யாவை ?

10. சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : 1 × 6 = 6

11. தமிழ் - உயர்தனிச் செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. நீதி கூறும்போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுக : 2 × 10 = 20

13. 'வேலி' அல்லது 'மகன்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'கிழிசல்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

'பழிக்குப்பழி' - இக்கதையில் வரும் கிட்டு, தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

அல்லது

சாலையோரம் பிச்சையெடுத்த குழந்தையை எடுத்து வளர்த்து வாழ்க்கையில் உயரவைத்து சாதனை படைத்ததாக ஒரு கதை எழுதுக.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

ஆக்கம் வேண்டுமெனில் - நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா ! ஓயாது
உழைக்க வேண்டுமப்பா !
உண்ணும் உணவுக்கும் - இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை - நம்பி
வாழ்தல் வாழ்வாமோ ?
சாதிச் சண்டையெல்லாம் - ஒய்ந்து
தணிய வேண்டுமப்பா !
நீதி நாடெங்கும் - நிலைத்து
நிற்க வேண்டுமப்பா !
உலக மக்களெல்லாம் - அன்பொடு
ஒருதாய் மக்களைப்போல்
கலகமின்றி வாழும் - காலம்
காண வேண்டுமப்பா !

– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.**

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. As they sow, so let them reap.

17. Good Homer sometimes nods.

18. Face is index of the mind.

19. Libraries serve as a means of spreading education among people.

20. To the good people, World appears good.

21. Education should develop and promote good values.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வு அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''இளங்கன்று பயமறியாது''

ஆ) ''ஆற்றில் போட்டாலும் அளந்து போடு''

இ) ''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்''

*அல்லது*

*'மழை'* அல்லது *'மனிதநேயம்'* என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா**

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை எழுதுக. 5 × 2 = 10

கீர்த்தனைகள் வாயால் பாடுவதற்காக உருவாக்கப்பட்டாலும் இலக்கியமாகவும் கருதப்படுகிறது. கீர்த்தி என்னும் சொல்லில் இருந்து கீர்த்தனை உருவாயிற்று. தமிழகத்தில் துளஜாஜி என்னும் மராட்டிய அரசர் ( 1763 — 87 ) காலத்திலிருந்து கீர்த்தனைகள் பாடும் வழக்கம் பெருக ஆரம்பித்தது என்பர். தமிழில் கிடைத்துள்ள கீர்த்தனைகளில் பழமையானவாக முத்துத் தாண்டவரின் தில்லைத் திருத்தலக் கீர்த்தனையும் அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையும் குறிப்பிடத் தக்கன. அருணாசலக் கவிராயர் சீர்காழியில் பிறந்தவர். இவர் சில சிற்றிலக்கியங்களை இயற்றி இருந்தாலும் இவருக்குப் புகழைத் தந்தது இராமநாடகக் கீர்த்தனைதான்.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

முத்துத் தாண்டவர் அருணாசலக் கவிராயருக்கு முற்பட்டவர். இவரும் சீர்காழியில் பிறந்தவர். இவரை ஞானசம்பந்தருடன் ஒப்பிட்டுப் பேசுவது மரபு. இவரது கீர்த்தனைகள் நாயக, நாயகி பாவத்தில் அமைந்தவை. இவற்றில் தன்னுணர்ச்சி மேலோங்கி உள்ளது என்பர். கோபாலகிருஷ்ண பாரதியார், அண்ணாமலை ரெட்டியார், வேதநாயகம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், கவிமணி, சுத்தானந்த பாரதியார், பெரியசாமித் தூரன் போன்றோரும் தமிழிசைக்குத் தொண்டு செய்துள்ளனர். தமிழிசையை அழியாமல் பாதுகாத்தவர் அண்ணாமலை அரசராவார். டி.கே.சி, கல்கி, இராஜாஜி போன்றவர்களும் தமிழிசை வளரப் பாடுபட்டவர்கள் ஆவர்.

*வினாக்கள் :*

16. கீர்த்தனைகள் பாடும் வழக்கம் எந்த மன்னர் காலத்தில் பெருகியது ?

17. தமிழில் கிடைத்துள்ள பழமையான கீர்த்தனைகள் யாவை ?

18. அருணாசலக் கவிராயருக்கு புகழைத் தேடித் தந்தது எது ?

19. முத்துத்தாண்டவர் யாருடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டார் ?

20. முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் பற்றி எழுதுக ?

21. தமிழிசைக்குத் தொண்டு செய்தவர்கள் சிலரைக் குறிப்பிடுக.

22. தமிழிசையை அழியாமல் பாதுகாத்தவர் யார் ?

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை...

10 ...

23. பத்துப் பழங்களில் ஒரு பழமே நல்லன.

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. நெல்லிகாய், தான்றிகாய், கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும்.

( ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. 'தினை' - 'திணை' அல்லது 'களை' - 'கழை'

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

26. 'வெண்ணிலாக் கலக்கலவென்றுச் சிரித்தாள்'. ( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

27. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

28. 'அப்பிசி மாசம் அடமள இம்பாங்க'

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

29. சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தவனை ஆசீர்வதித்தேன்.

( வடசொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக )

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



30. பரவை இறையாகப் பயிறு வகைகளைத் திண்ணும்.

( எழுத்துப் பிழைகளை திருத்தி எழுதுக )

31. காட்டில் யானை கத்தியது, நரி கூவியது.

( மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

32. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதியுள்ள தமிழியற் கட்டுரைகள் என்னும் நூல் எளிமையும் ஆழமும் கொண்டு விளங்குகிறது.

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).

---

www.StudentBounty.com
Homework Help & Pastpapers